
ஓம்

முருகா



யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கு

# அமரர். சாம்பசிவம் கணேசலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

26.05.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும்,
கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும்
கொண்டிருந்த முன்னாள் வர்த்தகப் பிரமுகர்

# அமரர். சாம்பசிவம் கணேசலிங்கம்

அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

26.05.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத சமர்ப்பணம்

எம் குடும்பத்தின் குல விளக்காய் இருந்து
எல்லோர் மனங்களையும்
தன் செயலால் கவர்ந்திழுத்து
இல்லறத்து நல்விளக்காய்
ஈடில்லாக் குணக்குன்றாய்
மனிதர்குல மாவிளக்காய்
எல்லையில்லாக் குணாளனாய்
நல்லறத்து வழிநின்று
தன்னையே உருக்கி
ஒளியூட்டிய தெய்வத்திற்கு
எம் உள்ளக்கமலத்தில் உனையிருத்தி
இந் நினைவஞ்சலி நூலினை
எங்கள் அன்புத் தெய்வத்தின்
பாத கமலங்களுக்கு
உணர்வோடு சமர்ப்பின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

இறந்தவரோ ருடன்செல்ல எவருமே துணிவதில்லை
இருப்பவர்கள் இறப்போமென றுணர்வதில்லை
இறப்பென்ப தான் மாவின் சட்டை மாற்றம்
அது வாழ்ந்த உடலென்ப தொருநாள் தானழியும்
உறக்க மென்ப தெமை நாடி வருவது போல
நீளுறக்க மொன்று வரும் அது தான் மரணம்
அறமொன்றே ஆன்மாவோ டிணைந்து செல்லும்
மாடி மனைமக்களொடு எதுவும் செல்லா
இறந்தவர் பிரிவெண்ணி இறப்பவர் நாமழுதென்ன
இது போல எமைத்தொடரு மிறப்பைக்கண்டஞ்சாமல்
பிறவிப் பயன் பெற்றுப் பேரின்பம் நாம்பெறவே
விநாயகன் பாகம் பற்றிப் பணிவோமே.

கையில் உள்ள கோலதனால் காலவன் ஏட்டினிலே
இவ்வளவே என்றெழுதி இருப்பதனை அறியாது
இவ்வுலகு வாழ்வு சகிதம் மனம் மாளாது
பொய்யுலகு என்பதனை புரிந்துணர்ந்து வாழ்ந்திடுவீர்

உ
சிவமயம்



தோற்றம்
18
*
06
*
1947

மறைவு
27
*
04
*
2009

யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும்,
கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும்
கொண்டிருந்த முன்னாள் வர்த்தகப் பிரமுகர்

## அமரர். சாம்பசிவம் கணேசலிங்கம்

அவர் தம்

### திதி வெண்பா

விரோதி வருஷ விண்மதி மலர வரும்
சித்திரையின் திருதியைநாள் - சீரோங்கு
கொக்குவிலம் பதி கணேசலிங்கச் செம்மல்
வாக்குயர்ந்தான் கழல் சேர்ந்தார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் வர்த்தகப் பிரமுகர்

# அமரர் சாம்பசிவம் கணேசலிங்கம்
## அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இலங்கைத் திருநாட்டின் இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் யாழ்ப்பாண தீபகற்பகத்தில் சகல சிறப்பும் மிக்க கொக்குவில், தாவடியில் சாம்பசிவம் - கனகம்மா தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வனாக கணேசலிங்கம் 18.06.1947 இல் இப்பூவுலகில் பிறந்தார். தந்தையார் அமரர் நாகலிங்கம் சாம்பசிவம் அவர்கள் 'சாம்பசிவம் அன்ட் கோ' நிறுவனத்தின் ஸ்தாபகராக இருந்து யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகராக விளங்கியவர். தாயார் கனகம்மா இல்லத்த ரசியாக இருந்து மணாளனின் வாழ்வுக்கும், வர்த்தகத்திற்கும், பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தார்.

அமரர் கணேசலிங்கம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை கொக்குவில் தாவடியில் பயின்றார். பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மேற்படிப்பைத் தொடர்ந்தார்.

அதன் பின்னர் தகப்பனாரின் வியாபார ஸ்தாபனமான 'சாம்பசிவம் அன்ட் கோ' நிறுவனத்தில் இணைந்து தந்தையாருக்கு உதவியாக வியாபாரத்தில் ஈடுபட்டார்.

இளம்பராயத்தை இவர் அடைந்தவுடன் பெற்றோர் இவருக்கு திருமணத்தை நடத்தி வைத்தனர். காரைநகரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த பிரபல வர்த்தகர் சேர்ந்த எஸ். ஆர். செல்லத்துரை, லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் இளைய மகளான தேவ ரோகிணியை 03.11.1976 இல் அமரர் கணேசலிங்கம் கரம் பிடித்தார்.

தாயார் கனகம்மா அவர்களுடன் கொக்குவிலில் வசித்துவந்த அமரர் கணேசலிங்கம் 2001 ஆம் ஆண்டு தனது குடும்பத்தாருடன் கொழும்பு வந்து இங்கேயே தங்கி பிள்ளை களின் மேற்படிப்புக்களை தனது மனைவியுடன் இணைந்து கவனித்து அவர்களது முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டார். மகன் சரவணன் பாடசாலைப் பருவத்தில் திறமையான மாணவனாக இருந்ததுபோல கொழும்பு வந்து உயர்கல்வியைத் தொடர்ந்தபோது குறுகிய காலத்திலேயே சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று கணக்காளராகி பெற்றோரை மகிழ்வுறச் செய்தார். அவர் தற்போது அவுஸ்தி ரேலியாவில் கணக்காளராகப் பதவி வகித்து வருகின்றார்.

தனது செல்ல மகளுக்கு திருமணத்தை நடத்திப் பார்க்க எண்ணிய இவரும் மனைவியும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சற்குணநாதன் - தவராஜேஸ்வரி தம்பதி யினரின் ஒரே புதல்வனான இந்திரஜித் அவர்களை மகள் சாந்திக்கு 22.01.2005 இல் திருமணம் செய்து வைத்தனர். இப்போது இவர்கள் கனடாவில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு திவாகரி எனும் மகள் பிறந்தார். திவாகரியே அமரர் கணேசலிங்கம் அவர்களுக்கு ஒரேயொரு செல்லப் பேத்தியாக இருந்தார்.

விடுமுறையில் திவாகரி தாயாருடன் இலங்கை வந்து சுமார் மூன்று மாத காலம் தங்கியிருந்தபோது மிகவும் அன்பாகவும், பாசமாகவும், செல்லமாகவும் பேரனுடன் இருந்துள்ளார். அதேபோன்று அன்பும், பாசமும் நிறைந்த



மகள் சாந்தியுடனும், மகன் சரவணனுடனும் அமரர் கணேசலிங்கமும், துணைவியாரும் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தியா தமிழகம் சென்று உடல்நலம் பெற சிகிச்சை பெற்றதுடன் புகழ்பெற்ற திருத்தலங்களுக்கும் சென்று வழிபாடு நடத்தியுள்ளனர். குறிப்பாக சிதம்பரம் தேவஸ்தானத்திற்குச் சென்று வழிபட்டு ஆடலரசன் நடராஜப் பெருமானின் தரிசனம் பெற்றுள்ளார்.

இந்தியாவிற்குச் சென்று நாடு திரும்பிய இக்காலகட்டத்தில் இவருக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போனது. அப்பலோ வைத்தியசாலையில் அவ்வப்போது சிகிச்சை பெற்று வந்த இவர் சிரேஷ்ட வைத்தியர் திரு. சுஜித் சோமையா அவர்களது ஆலோசனையின்பேரில் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. சுமார் இருவாரகாலம் அப்பலோவில் இவர் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்தார்.

அச்சமயம் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த மகன் சரவணன் அவர்களும் தந்தையாரை ஒருவாரகாலம் தங்கியிருந்து பார்வையிட்டு திரும்பினார். துரதிஸ்டவசமாக மகன் சரவணன் திரும்ப அவுஸ்திரேலியா செல்லத் தயாராகி சிங்கப்பூரில் மாற்று விமானம் ஏறுவதற்காக காத்திருந்தவேளை 27.04.2009 அதிகாலை தந்தையாரின் உயிர் பிரிந்த சோகச் செய்தி அவரது செவிகளுக்குக் கிடைக்க பயணத்தை இலங்கை நோக்கி திருப்பிவிட்டார்.

ஆம், வைத்தியர்களின் தீவிர சிகிச்சை பலனளிக் காமல் 27.04.2009 அதிகாலை 4.00 மணிக்கு கணேசலிங்கம் அவர்களது உயிர் அவரது உடலைவிட்டுப் பிரிந்தது. பிறவிச் சைவப் பரம்பரையில் உதித்த கணேசலிங்கம் அவர்கள் இறை வழிபாட்டிலும், தொண்டுகள் புரிவதிலும் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையுடன் மேற்கொண்ட காரணத்தினால் அவரது ஆன்மா இறைவனுடன் சங்கமமாகியபோது அவர் எவ் விதமான துன்பமோ அல்லது ஆர்ப்பாட்டமோ இன்றி அமைதியாகச் சங்கமமாகியது.

## அமரர் அவர்களின் சகோதர சகோதரிகள்

அமரர் கணேசலிங்கம் அவர்களுக்கு இரண்டு ஆண் சகோதரர்களும், மூன்று பெண் சகோதரங்களும் உள்ளனர். மூத்த சகோதரர் டாக்டர். சண்முகலிங்கம் அவர்கள் தற்போது அவுஸ்திரேலியாவில் இருக்கின்றார். இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த நளாயினி அவர்களை மணம்முடித்து சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்.

அமரர் கணேசலிங்கத்திற்கு அடுத்தாற்போல் சகோதரி சிவகாமி அவர்கள் பிறந்தார். இவர் தற்போது கொக்குவிலில் தாயார் கனகம்மா அவர்களுடன் வசித்து வருகின்றார்.

சிவகாமிக்கு அடுத்து மகேஸ்வரி அவர்கள் உள்ளார். இவர் கோண்டாவிலைச் சேர்ந்த கூட்டுறவுச் சபையின் முன்னாள் செயலாளர் சிவசுப்பிரமணியம் அவர்களை மணம் முடித்து தற்போது யாழ்ப்பாணத்தில் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்.

மகேஸ்வரிக்கு அடுத்து விக்னேஸ்வரி அவர்கள் விளங்குகிறார். இவர் கோண்டாவிலைச் சேர்ந்த கணக்காளர் முருகமூர்த்தி அவர்களை மணம்முடித்து தற்போது அவுஸ்திரேலியாவில் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்.

விக்னேஸ்வரிக்கு அடுத்து கடைசியாக நடேசன் அவர்கள் பிறந்தார். இவர் அத்தியடியைச் சேர்ந்த சுந்தரகாந்தி அவர்களை மணம்முடித்து தற்போது அவுஸ்திரேலியாவில் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்.



## துணைவியார்வழி மைத்துன மைத்துனிமார்

அமரர் கணேசலிங்கம் அவர்களது துணைவியார்வழி மைத்துனர்களாக முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் அமரர் எஸ். ஆர். எஸ். தேவதாசன் அவர்களும், முன்னாள் எஸ். ஆர். எஸ் ஜவுளி மாளிகை உரிமையாளர் அமரர் எஸ். ஆர். எஸ். தேவபாலன் அவர்களும் விளங்குகின்றனர். இவர்களில் தேவதாசன் அவர்கள் நாகேஸ்வரியையும், தேவபாலன் அவர்கள் கமலலோஜினிதேவியையும் மணம்முடித்தனர்.

அதேபோன்று அமரர் கணேசலிங்கம் அவர்களது துணைவியார்வழி மைத்துனிகளாக தேவிகாராணி, தேவகல்யாணி, தேவரத்தினம் ஆகியோர் விளங்குகின்றனர். இவர்களில் தேவிகாராணி அவர்கள் முன்னாள் கிறீண்லன்ட்ஸ் வங்கி அதிகாரி அமரர் சண்முகரத்தினம் அவர்களையும், தேவகல்யாணி அவர்கள் ஓய்வுபெற்ற சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் நல்லதம்பி சபாநாதன் அவர்களையும், தேவரத்தினம் அவர்கள் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் அருளம்பலம் விஜயரத்தினம் அவர் களையும் மணம்முடித்தனர்.

## இறுதி யாத்திரை

அமரர் கணேசலிங்கம் அவர்களின் பூதவுடல் கல்கிஸ்ஸை மகிந்த மலர்ச்சாலையில் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இந்து முறைப்படி தெகிவளை மயானத்தில் 30.04.2009 பகல் 11.30 மணிக்கு தகனம் செய்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் மொழிகள்

## மனைவி புலம்பல்

புன்னகை மொழி பேசும்
என்னுயிர் அன்பரே
புன்னகை இழந்தேன் நான்
உன்னுயிர் போனபின்
மெல்நகை உன்னுடன்
கண்டேன் நான் பரமும்
பெண்ணவள் நானிங்கே
கண்ணோடு துயரமும்
கலங்கி வாடி நிற்கின்றேன்
உங்கள் பிரிவால் என் அன்பரே!

## மகள் சாந்தி

அன்பாக பண்பாக
எமமோடு வாழ்ந்தவரே
துன்பங்கள் வந்தபோதும்
தெம்பாக நின்றவரே
அப்பா உங்களோடு
ஆனந்தமாயிருந்தோம்
தப்பாகிப் போச்சப்பா
கதறுகின்றோம்! கதறுகின்றோம்!



## மகன் சரவணன்

ஒரு மைந்தன் என்று சொல்லி
செல்லமாய வளர்த்த அப்பா
பெரு மைந்தன் ஆகி வாழ
வழிகளும் சொன்ன அப்பா
இரு கண்களும் குளமாகிப்
போனதப்பா உன் பிரிவால்
கருவாகி நின்றவரே,
கலங்க வைத்த தேனோ!

## மருமகன் இந்திரஜித்

சுமந்த மௌனத்தின் கனம் செறிந்து
முடிந்து விழுகின்றது மனம்
முடியவில்லை மாமா உங்கள் பிரிவின்
துயர் தாங்க முடியவில்லை
உங்கள் பிரிவுமுகம் எமை அழைக்கும் விதம்
இயல்போடு வருகின்ற தங்கள் பாசம்
முடியவில்லை மாமா உங்கள் பிரிவின்
துயர் தாங்க முடியவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேத்தி திவாகரி

ஐயா ஐயா என அருதினமும் அழைத்தே
அருகே வந்து விளையாடினேன்
சொல்லாமல் போனதெங்கே ஐயா
உங்களை நான் தேடுகின்றேன்
கேட்டதெல்லாம் தந்து சொல்வதெல்லாம் செய்து
அன்பைப் பொழிந்த ஐயா
சொல்லாமல் போனதெங்கே
பெரியவளானாலும் மறக்க முடியாத
என் ஐயா, உங்கள் நினைவு
இலகுவில் எனை விட்டகலாது
என்பது மட்டும் உண்மை!

## அம்மாவின் ஆறாத் துயர்

உன் அன்பின் குரலாக அம்மா என அழைத்த
இனிய ராகங்களை இலகுவில் மறக்க முடியுமா
இன்னும் என் மனதில், இந்த முதுமையிலும்
இசையுடன் கேட்கின்றதே அப்பா
கண்கள் குளமான செய்தி கேட்ட போதே
என்னை இழந்தேனே – மகனே
இனிய எமது சொந்தம் பிரிந்ததென்று
இதயம் பிளந்து அழுகின்றேன் ஐயா!



## சகோதரர்கள்

துருப்பிடித்த துயரத்தின் நடுவே
நாளும் நாளும் துடி துடித்து
காலை மாலை எந்த வேளை
என்றில்லாமல் - சகோதரனே
பிரிந்த உந்தன் நினைவுகளுடன்
நாமிங்கே....

கரு எடுத்து உயர் வெளியே
சோகக் கவி தொடுத்து
கதறி அழ வேண்டுமென்று
மனம் எடுத்து சகோதரனே
பிரிந்த உந்தன் நினைவுகளுடன்
நாமிங்கே சகோதரனே நாமிங்கே!

## சகோதரிகள்

அரிதான பிறவிதனில்
சகோதரியாய் அவதரித்தோம்
பெரிதான இப்புவியில்
பேசியுண்டு வாழ்ந்திருந்தோம்
உரித்தான அனைத்தும்
உவப்புடன் பகிர்ந்தெடுத்தோம்
பிரித்து விட்டு தேம்பி அழ
விதியாச்சே...விதியாச்சே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனிமார்

நல்வினைப் பயனாய்
மைத்துனர் ஆனாய் நீ
இவ்வினை இனிதாக
இன்பமாய் வாழ்ந்தாய் நீ
சொல்வினை சிலவேளை
சுகங்கள் மறுத்திருக்கும்
எவ்வினை செய்தோம் நாம்
ஏங்கித் தவிக்கின்றோம்!

## சுற்றத்தவர்

சுவையாக பேசுகின்ற
கலை கற்ற கலைஞன் நீ
சுமையான மனங்களை
இதயம் செய்யும் கவிஞன் நீ
இசைவாக வாழ்வினிலே
மணம் சேர்த்த மனிதன் நீ
இமை மூடிக் கொண்டாயே
இருட்டாகிப் போய்விட்டோம்!





அமரர். சாம்பசிவம் கணேசலிங்கம் அவர்களால் கொக்குவில் மேற்கில் அவரது இல்லத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள முதலி ஆலயத்திற்கு மனமுவந்து வழங்கப்பட்ட அருள்மிகு வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானுக்கு சிவாச்சாரியார்கள் பூஜை நடாத்துவதனைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் மேற்கு, அருள்மிகு ஸ்ரீ முதலி கோவில்

# பிரதம குருக்கள் அனுதாபம்

யாழ்ப்பாணத்தின் வடக்கே கொக்குவில் கிராமத்தை வாழ் விடமாக கொண்ட அமரர் திரு.சா.கணேசலிங்கம் அவர்களின் இழப்பு, எமது ஆலய வளர்ச்சிக்கு ஏற்பட்ட பேரிழப்பென்றே கூறலாம்.

தனது வாழ்நாளில் மானிடப்பிறப்பின் பெரும் பயனை பெற்ற பெருமகனார் அமரர் திரு.சா.கணேசலிங்கம் எனக் கூறுதல் மிகையாகா, கொக்குவில் முதலிகோவில் முருகனின் ஆலய பரிபாலனத்திற்கு முழு அர்ப்பணிப்புடன் தோள் கொடுத்தவர். முருகப் பெருமானின் ராஜ மூர்த்தமான சண்முகரை (ஆறுமுகப் பெருமானை) எமது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு மூலகாரணமாக இருந்து முருகப் பெருமானின் முழு அனுக் கிரகத்தையும் பெற்றவர். அடியார்கள் சண்முகரை தரிசிக்கும் போதெல்லாம் முருகனின் அருள்கடாஷம் அவர் மேலும் வீசுதல் சிறப்பானதொன்றே.

கடந்த சில மாதங்களிற்கு முன்பு விதி வசத்தால் சிறு நோய் வாய்ப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்று வாழ்ந்து வந்தார். முருகப் பெருமானின் எண்ணப்படியோ என்னவோ 27.04.2009 அன்று தனது திருவடிக்குள் அன்னாரை இணைத்துக்கொண்டார்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க பூவுலகில் நன்கு வாழ்ந்த அவர் தெய்வத்துடன் கலந்து விட்டார். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாவலல முதலி கோவில் முருகப் பெருமானை பிரார்த்திப்போமாக!

**சு.பாலசுப்பிரமணிய சர்மா,** பிரதமகுரு
அருள்மிகு ஸ்ரீ முதலி கோவில், கொக்குவில் மேற்கு, கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நண்பனின் இதயத் துடிப்பு

சென்ற 2008 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இறுதியாக உன்னிடமிருந்து விடைபெற்று யாழ்நகர் சென்றேன். இந்த 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் திரும்பவும் கொழும்பு வந்து உனக்கு இரங்கல் மடல் எழுத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியுள்ளேன்.

உன்னை விட்டுப் பிரியும் பொழுதே எனக்குத் தெரியும் உன்னுடைய கடைசி நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டு இருந்தன என்று! அந்தளவிற்கு நோய்கள் உன்னை உருக்குலைத்திருந்தன. இருந்தும் அன்று தொட்டே உன்னிடமிருந்து வரும் அந்தப் **'பிடிவாதம்'** குறையவேயில்லை. அதை நானும் நேசித்தேன். காரணம் நானும் அந்த வாதத்திற்கு அடிமைப்பட்டவன்.

எங்கள் பால்ய நினைவுகளை அசைபோடுகின்றேன். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் தொடங்கிய எங்கள் நட்பு இன்றுவரை 52 வருடங்களாகத் தொடர்ந்திருக்கின்றது. பாடசாலை வாழ்க்கையை முடித்து, யாழ்நகரில் புகழ் பூத்த வியாபார ஸ்தாபனமாக விளங்கிய உனது தந்தையாரின் 'சாம்பசிவம் அன்ட் கோ' நிறுவனத்தை நிர்வகிக்க நீ சென்றாய். எனது தந்தையாரின் வியாபார ஸ்தாபனத்தை நிர்வகிக்க 1963 ஆம் ஆண்டு நான் வெலிமடைக்குச் சென்றேன்.

அதன்பின்பு ஒவ்வொரு வருடமும் கதிர்காமக் கந்தனைத் தரிசிப்பதற்காக காரில் நீ வெலிமடைக்கு வந்து என்னையும் கூட்டிக் கொண்டு கதிர்காமம் போய் அங்கிருந்து கொழும்பு சென்று வேல் விழாவையும் பார்த்துக் கொண்டு யாழ் நகர் திரும்புவோம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் நாங்கள் சுற்றாத இடங்களே இல்லை எனுமளவிற்கு நாம் ஒன்றாக எல்லா இடங்களுக்கும் சென்று வந்துள்ளோம். கணேசலிங்கம் எங்கு நின்றாலும் அங்கே இந்திரதாஸும் நிற்பான் என்று மற்றவர்கள் ஆச்சரியப்படும்படி நிஜமும், நிழலும் போல வாழ்ந்திருக்கின்றோம். தற்போது பிரிந்திருப்பது நிஜமா? நிழலா? புரியவில்லை!

'முகநக நட்பது நட்பன்று – நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு'

என்றும் உன் இனிய நினைவுகளுடன்,
நண்பன்,
**இ.இந்திரதாஸ்**



ISKCON

**International Society for Krishna Consciousness**

Founder Acharya : His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada
(Incorporated by Act of Parliament No. 69 of 1992)

## ஆழ்ந்த அனுதாபங்கள்

அமரர். சாம்பசிவம் கணேசலிங்கம் அவர்கள் மரணமான செய்தி கேள்வியுற்று மிகவும் கவலை அடைந்தோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் எமது ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தின் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரர் கணேசலிங்கம் அவர்கள் சைவ சமயப் பற்றாளனாக வாழ்ந்து சைவப்பெருமகனாக இறைவனடி சேர்ந்துள்ளார். ஆலயங்களுக்கு உதவிகள் புரியும் கொடைவள்ளல் மனம் கொண்ட அவரது ஆத்மா நிச்சயம் இறைவனுடன் சங்கமமாகியிருக்கும். அவரது சேவைகள் அவரது குடும்பத்தவர்களால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது எமது அவாவாகும்.

நன்றி.
ஹரே கிருஷ்ணா

இங்ஙனம்
என்றும் கிருஷ்ண சேவையில்
**மஹா கர்த்ததாஸ்**
ஆலயத்தலைவர்
சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்
(இலங்கைக்கிளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Paropakara Mani (Kanchi)*
*Sivathiru Thondar (Thiruvavaduthurai),*
*Kala Rasiga Mani ,Arul Neri Thondar,*
*Siva Tharma Surapi, Sivanesa Selvar,*
*Siva Neri Kavalar, Sri Kanaga Jothi*

***K.K. Subramaniam***
*Asst. Director of Customs (Rtd.) Consultant,*
*Justice of thePeace*
*28 Ratnakara Place, Dehiwela, Srilanka,*
*Tel. /Fax: 2714757*
*Date:-*

## அமரர் கணேசலிங்கம் ஒரு சிறந்த வர்த்தகர்

யாழ்ப்பாணத்தில் பிரபலமான 'சாம்பசிவம் அன்ட் கோ' நிறுவனத்தின் முன்னாள் உரிமையாளரான அமரர் சாம்பசிவம் கணேசலிங்கம் அவர்களது மறைவுச் செய்தி கேள்வியுற்று ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னார் சிறந்த ஒரு வர்த்தகராக விளங்கியவர். அத்துடன் அவர் ஒரு சைவப் பிரமுகராகவும், ஆலயத் தொண்டில் தீவிர ஈடுபாடு கொண்டவராகவும் காணப்பட்டார்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அவர் இருந்த காலத்தில் நிறைந்த சைவப் பற்றாளராகக் காணப்பட்டார். தனது தந்தையாரின் வர்த்தகத்தைத் திறம்பட நடத்திய பெருமை அவரைச் சாரும். நாட்டுச் சூழலும், அவரது உடல்நலக் குறைவும் அவரைத் தொடர்ந்தும் வர்த்தகத்தில் ஈடுபட இடம் கொடுக்கவில்லை. இது ஒரு துரதிஸ்டம் என்றுதான் கூறவேண்டும். அவரை ஒரு சிறந்த வர்த்தகப் பிரமுகர் என்று கூறுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது.

காரைநகரைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் எஸ் ஆர். செல்லத்துரை அவர்களது புதல்வி தேவரோகிணியை மணம் முடித்த அவர் தான் வாழ்ந்த காலத்தில் சீரும், சிறப்புமாக நற்பண்புகளுடன் வாழ்ந்துள்ளார். அதேபோன்று அவரது பிள்ளைகளும் சிறப்பான பண்புகளுடன் உள்ளனர்.

அவரது மறைவால் துவண்டுபோயிருக்கும் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு காரைநகர் மக்கள் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சிவநெறிச்செல்வர் கே. கே. சுப்பிரமணியம் ஜே.பி.
முன்னாள் சுங்கத் திணைக்கள பணிப்பாளர்.



## துயர் பகிர்கின்றோம்

கா. சாம்பசிவம்
[illegible] கோவில் லேன்
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

தங்கள் குடும்பத்தினராகிய சாம்பசிவம் கணேசலிங்கம்

அவர்களின் மறைவுச் செய்தியினால் எமது ஆழ்ந்த கவலையை தங்களுடன் பகிர்ந்து கொள்வதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து, அன்னாரின் ஆத்மா இறைவன் திருப்பாதம் அடைந்து இணையில்லா பேரின்ப முத்தியடைய இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்து இவ்வுலகு**
**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும் -குறள்-**

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு சேவை
முகவர் தபாலகம்
இல. 303 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 021 222 5392

***தங்கள் துயரினைப் பகிர்ந்து கொள்ளும் உரிமையாளரும், சக ஊழியர்களும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலிருந்து வெளிவரும் 'வீரகேசரி' பத்திரிகையில் அமரர் கணேசலிங்கம் அவர்களது மறைவு தொடர்பாக 29.04.2009 மற்றும் 30.04.2009 ஆகிய தினங்களில் மரண அறிவித்தல் வெளியிடப்பட்டது. அவற்றுள் ஒன்றின் மீள் பிரசுரமே இதுவாகும்.

## மரண அறிவித்தல்



### சாம்பசிவம் கணேசலிங்கம்
### (கொக்குவில்)

யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சாம்பசிவம் கணேசலிங்கம் 27.04.2009 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற சாம்பசிவம் கனகம்மா ஆகியோரின் அன்பு மகனும் காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான எஸ்.ஆர். செல்லத்துரை லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் தேவரோகினியின் அன்புக்கணவரும் சாந்தி(கனடா), சரவணன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இந்திரஜித்தின் அன்பு மாமனாரும் திவாகரியின் அன்புப் பேரனும் சண்முகலிங்கம், சிவகாமி, மகேஸ்வரி, விக்னேஸ்வரி, நடேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நளாயினி, சிவசுப்பிரமணியம், முருகமூர்த்தி, சுந்தரகாந்தி, காலஞ்சென்ற தேவதாசன், தேவிகாராணி, தேவகல்யாணி, காலஞ்சென்ற தேவபாலன், தேவரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் கல்கிஸ்ஸை மஹிந்த மலர்ச்சாலையில் நேற்று 28.04.2009 காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் 30.04.2009 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெற்று பகல் 11.00 மணிக்கு கல்கிஸ்ஸை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : க.சரவணன் (மகன்)

**89/1 B, பஸல்ஸ் லேன், வெள்ளவத்தை. T.P : 0112 362281**



யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகையிலும் அமரர் கணேசலிங்கம் அவர்களது மறைவு தொடர்பாக 29.04.2009 அன்று மரண அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதன் மீள் பிரசுரமே இதுவாகும்.

## மரண அறிவித்தல்

### சாம்பசிவம் கணேசலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாம்பசிவம் கணேசலிங்கம் 27.04.2009 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காரை நகரைச் சேர்ந்த S.R.செல்லத்துரை - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தேவரோகினியின் அன்புக் கணவரும் சாந்தி (கனடா), சரவணன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரசித்தின் அன்பு மாமனும் திவாகரியின் அன்புப் பேரனும் சண்முகலிங்கம், சிவகாமி, மகேஸ்வரி, விக்கினேஸ்வரி, நடேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நளாயினி, சிவசுப்பிரமணியம், முருகமூர்த்தி, சுந்தரகாந்தி, காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் தேவிகாராணி, தேவகல்யாணி, காலஞ்சென்ற தேவபாலன் மற்றும் தேவரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நேற்று (28.04.2009) காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2009) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று மு.ப.11 மணிக்கு கல்கிசை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலி கோயில் லேன்,<br>
கொக்குவில் மேற்கு, திருமதி க.சாம்பசிவம்<br>
கொக்குவில். (84867) (தாய்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து



குரவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியா ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!



# கந்தசஷ்டி கவசம்



**காப்பு**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென



டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தால் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்



எல்லிலு மிருட்டிலும் எதிர்படு அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனையடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடியவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட



எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
அடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்க்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேசிகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்



# முருகன் பாடல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) ஓம் முருகா வேல் முருகா | வா | வா | ஷண்முகா |
| கால் பிடித்தோம் காத்தருள | வா | வா | ஷண்முகா |
| அன்பருக்கு அன்பனே நீ | வா | வா | ஷண்முகா |
| ஆறுபடை வீடுடையாய் | வா | வா | ஷண்முகா |
| 2) இன்பமய ஜோதியே நீ | வா | வா | ஷண்முகா |
| ஈசனுமை பாலகனே | வா | வா | ஷண்முகா |
| உரகநாபன மருகனே நீ | வா | வா | ஷண்முகா |
| ஊமைக் கருள் புரிந்தவனே | வா | வா | ஷண்முகா |
| 3) எட்டுக்குடி வேலவா நீ | வா | வா | ஷண்முகா |
| ஏறுமயில் ஏறியே நீ | வா | வா | ஷண்முகா |
| ஐங்கரனுக் கிளையவனே | வா | வா | ஷண்முகா |
| ஆறுமுக வேலவனே | வா | வா | ஷண்முகா |
| 4) ஒய்யாரி வள்ளிலோலா | வா | வா | ஷண்முகா |
| ஓங்கார தத்துவமே | வா | வா | ஷண்முகா |
| ஔவைக் குபதேசித்தவா | வா | வா | ஷண்முகா |
| அகிலலோக நாயகனே | வா | வா | ஷண்முகா |
| 5) ஆறுபடை வீட்டில் வாழும் - ஆண்டவனே | | | சண்முகா |
| உன் ஆறுமுகம் காண வந்தேன் ஆடிவா | | | சண்முகா |
| கூர்வடிவேல் தாங்கிநின்ற கோலா கலா | | | சண்முகா |
| ஏறுமயில் ஏறி நின்று ஆடவா | | | சண்முகா |
| 6) திருப்புகழைப் பாடவைத்த தேவனே என் | | | சண்முகா |
| நின், திருப்படியில் ஏறி வந்தோம் தேவனே | | | சண்முகா |
| ஒரு முகமாய்க்கூடி வந்தோம் ஓங்கார | | | சண்முகா |
| குரு முகமாய் வந்தாளும் குருபரனே | | | சண்முகா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக நாமாவளி

வேல்முருகா மால்மருகா வாவா சண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வாவா சண்முகா

நால்வேதப் பொருளானாய் நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா

செல்லமாகச் சிவை அணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல் தாங்கிஎன் தேவா சண்முகா
(வேல்)

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்கார சீலனே சண்முகா
(வேல்)

நாறுமலை அணிமார்பா நாயகா சண்முகா
நால்வேதப் பொருளான நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா
(வேல்)

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா சண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முக்தனே சண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா சண்முகா
அடியாருள்ளக் குகையமர்ந்த ஆனந்தா சண்முகா
(வேல்)



வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா சண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா சண்முகா
(வேல்)

எல்லை யில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறை அன்புருவே என்முருகா சண்முகா
தில்லையிலே ஆடும்தேவி பாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா சண்முகா
(வேல்)

தொல்லை எலாங் கடந்தபதம் தந்திடுவாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னேவந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
கல்லெனச்சிலம் பொலிக்க ஓடிவா சண்முகா
(வேல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய்இ விளங்குஒளியாய்
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்



எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடுஉற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய்இ தணியாய் இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்இ சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்இ விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய்இ எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராது நின்ற பெருங்கருணைப் போராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்


மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**காலத்தினாற் செய்த உதவி ___ சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது**

எமது பாசமிகு குடும்பத் தலைவர்
திரு.சாம்பசிவம் கணேசலிங்கம் அவர்கள் மறைந்த செய்தி
கேட்டு இல்லம் விரைந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
அவரது பூதவுடலுக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தி,
தகனக் கிரியைகளில் கலந்து ஆத்மா சாந்தியடைய
பிரார்த்தித்த அனைவருக்கும், தொலைபேசி மூலம்
தொடர்பு கொண்டும், கடிதங்கள் மூலம்அனுதாபம் அனுப்பியும்
எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.
அத்துடன் இன்று 26.05.2009 செவ்வாய்க்கிழமை
கொழும்பு, பம்பலபிட்டி தொடர்மாடி சனசமூக நிலையத்தில்
நடைபெறும் அன்னாரது 31ஆம் நாள் அந்தியேட்டி
நிகழ்வுகளிலும், அஞ்சலி பிரார்த்தனைகளிலும்,
அதேபோன்று இன்றைய தினம் கொக்குவிலில்
அமைந்துள்ள அன்னாரது சகோதரியின் இல்லத்தில்
நடைபெறும் பிராத்தனைகளிலும், வழிபாடுகளிலும்
கலந்து கொள்ளும் உங்கள் அனைவருக்கும்
எமது உளமார்ந்த நன்றிகள்.

இங்ஙனம்,

**திருமதி. க. தேவரோகிணி (மனைவி)**
**சரவணன் (மகன்) சாந்தி (மகள்)**
**இந்திரஜித் (மருமகன்) திவாகரி (பேத்தி)**
89/1B, பஸ்ஸல்ஸ் லேன், கொழும்பு – 06.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.



'இதுவே உலகின் நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்'
- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



Printed by : Vihadan Printer, 541/2, Galle Road, Wellawatte. T.P: 2504370, 2361329

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org